9 - JUN 1982

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை, 1981 ஏப்ரல் 8.

[பங்குனி 26, ரௌத்திரி—திருவள்ளுவர் 2012.]

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'' அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மையவர் ''

சொற்களின் வகைகள் பலவும் அறிந்த தூய்மையினையுடைய அன்பர், தம்முன்னே உள்ள அவையினரின் இயல்புகளை அறிந்து, அவ்விடத்தில் சொல்லத் தக்கனவற்றை ஆராய்ந்து பார்த்துச் சொல்லுதல் வேண்டும்.

1. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, '' பொதுப் பணி மற்றும் போக்குவரத்துத் துறைகள் குறித்த தமிழ்நாடு அரசின் 1963–64 முதல் 1965–66 வரை மற்றும் 1969–70 முதல் 1971–72 வரையிலான ஆண்டுக் கணக்குகளின் மீதான குழுவின் முந்தைய அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை பற்றிய '' பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை (எட்டாவது அறிக்கை) அவைக்கு அளிக்கிறேன்.

2. வரவு—செலவுத் திட்டம்—1981-82 வாக்கெடுப்பு

(ஆ) கோரிக்கை எண் 18 மருத்துவம்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

'' மானியக் கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 62,22,09,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ''.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.